ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய ஸ்ரீமத் வரத குரவே நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# கோயில் ஸ்ரீராமநவமி



நம்பெருமாள் சேரகுலவல்லித் தாயார் சேர்த்தி சேவை
புகைப்பட உதவி : ஸ்ரீ N.சந்தான கிருஷ்ணன், ஸ்ரீரங்கம்

## தனியன்

சைத்ரமாஸே ஸிதே பசேஷ நவம்யாஞ்ச புனர்வஸௌ ।
மத்யாஹ்நே கர்க்கடே லக்நே ஜாதம் ராமம் ஸமாஸ்ரயே ॥

கௌஸல்யா ஸுஸுபே தேந புத்ரேணாமித தேஜஸா ।
யதாவரேண தேவாநா மதிதிர் வஜ்ரபாணிநா ॥

ஸ்ரீராமர் அவதரித்த ஸ்தலம் - திருஅயோத்தி

திருநட்சத்திரம் - சித்திரை மாதம் புனர்பூச நட்சத்திரம்
திதி - சுக்ல பசஷ நவமி
திருஅயோத்தியை மங்களாசாசனம் செய்துள்ள ஆழ்வார்கள் - நம்மாழ்வார், குலசேகரழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கையாழ்வார்.

ஸ்ரீராம நாமத்தின் பெருமை

ஸ்ரீராம நாமம் மட்டுமே தாரக மந்திரம் என்று அழைக்கப்படுகிறது. தாரக மந்திரம் என்பது இந்த சம்சாரமாகிய கடலை கடப்பதற்கு உதவுகிறது. ஸ்ரீராம நாமத்தின் பெருமையை கீழ்கண்ட விஷ்ணு ஸஹஸ்ர நாமஸ்லோகம் விவரிக்கிறது.

ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே /
ஸஹஸ்ர நாமதஸ்துதுல்யம் ராமநாம வரானனே //

ஸ்ரீவிஸ்வாமித்திரர் ஸ்ரீராமரை துயில் எழுப்பியபோது சொன்ன ஸ்லோகத்தை இங்கே காண்போம் :

கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே /
உத்திஷ்ட நரஸார்துல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம் //

கோயில் ஸ்ரீராம நவமி அன்று நம்பெருமாளுக்கும் குலசேகராழ்வார் திருமகளான சேரகுலவல்லித் தாயாருக்கும் சேர்த்தி சேவை நடைபெறும். அன்று பெருமாள் திருமொழி அரையர் சேவை மற்றும் இருவருக்கும் திருமஞ்சனமும் நடைபெறும்.

ஆழ்வார்கள் ஸ்ரீராமரை எவ்வாறு அனுபவித்தார்கள் என்பதை கீழ் கண்ட சில பாசுரங்கள் விவரிக்கின்றன.

பொய்கையாழ்வார் - முதல் திருவந்தாதி - 59ஆம் பாசுரம்

அடைந்த அருவினையோடு அல்லல் நோய் பாவம்
மிடைந்தவை மீண்டுடொழிய வேண்டில் - நுடங்கிடையை
முன்இலங்கைவைத்தான் முரணழிய. முன்னொருநாள்
தன்வில் அங்கைவைத்தான் சரண்.

பூதத்தாழ்வார் - இரண்டாம் திருவந்தாதி - 25ஆம் பாசுரம்

சென்றது இலங்கைமேல் செவ்வேதன் சீற்றத்தால்
கொன்றது இராவணனைக்கூறுங்கால் - நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல் வேங்கடமே. விண்ணவர்தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து.

பேயாழ்வார் - மூன்றாம் - திருவந்தாதி - 52ஆம் பாசுரம்

எய்தான்மராமர மேழும் இராமனாய்
எய்தானம்மான் மறியைஏந்திழைக்காய் - எய்ததுவும்
தென்னிலங்கைக்கோன்வீழ, சென்று குறளுருவாய்
முன்னிலங்கைக்கொண்டான்முயன்று.

திருமழிசைப்பிரான்

நான் முகன் திருவந்தாதி - 28ஆம் பாசுரம்

இதுவிலங்கையீடழியக் கட்டியசேது
இதுவிலங்குவாலியைவீழ்த்தது - இதுவிலங்கை
தானொடுங்கவில்நுடங்கத் தண்தாரிராவணனை
ஊனொடுங்கவெய்தானுகப்பு.

திருச்சந்தவிருத்தம் - 32ஆம் பாசுரம்

குரக்கினப்படைகொடு குரைகடலின் மீதுபோய்
அரக்கரங்கரங்க வெஞ்சரம்துரந்தஆதிநீ
இரக்கமண்கொடுத்தவற்கு இருக்க ஒன்றுமின்றியே
பரக்கவைத்தளந்துகொண்ட பற்பபாதனல்லையே?

நம்மாழ்வார் - 7ஆம் பத்து 5ஆம் திருவாய்மொழி 1ஆம் பாசுரம்

கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?
புற்பாமுதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

குலசேகரப்பெருமாள் - பெருமாள் திருமொழி -பத்தாம் திருமொழி - 1ஆம் பாசுரம்

அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தியென்னும்
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும்சோதி
வெங்கதிரோன்குலத்துக்குஓர் விளக்காய்த்தோன்றி
விண்முழுதும்உயக்கொண்ட வீரன்தன்னை
செங்கணெடுங்கருமுகிலைஇராமன்தன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
எங்கள்தனிமுதல்வனை எம்பெருமான்தன்னை
என்றுகொலோ! கண்குளிரக்காணும்நாளே.

பெரியாழ்வார் - 4ஆம்பத்து 8ஆம் திருமொழி 5ஆம் பாசுரம்

பெருவரங்களவைப்பற்றிப் பிழக்குடையஇராவணனை
உருவரங்கப் பொருதழித்து இவ்வுலகணைக்கண்பெறுத்தானூர்
குரவரும்பக்கோங்கலரக் குயில்கூவும் குளிர் பொழில்சூழ்
திருவரங்கமென்பதுவே என்திருமால்சேர்விடமே.

ஸ்ரீஆண்டாள் - திருப்பாவை - 24ஆம் பாசுரம்

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி.
சென்றங்குத் தென்னலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச்சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்றுகுணிலாஎறிந்தாய்! கழல்போற்றி
குன்றுகுடயா எடுத்தாய்! குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுஉன் சேவகமே ஏத்திப்பறைகொள்வான்.
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய.

நாச்சியார் திருமொழி - 3ஆம் திருமொழி 4ஆம் பாசுரம்

பரக்கவிழித்து எங்கும் நோக்கிப் பலர்குடைந்தாடும் சுனையில்
அரக்க நில்லாக் கண்ணநீர்கள் அலமருகின்றவாபராய்
இரக்கமே லொன்றுமிலாதாய்! இலங்கையழித்த பிரானே!
குரக்கரசு ஆவது அறிந்தோம் குருந்திடைக் கூறைபணியாய்

தொண்டரடிப்பொடியாழ்வார் - திருபள்ளியெழுச்சி - 4ஆம் பாசுரம்

மேட்டிளமேதிகள் தளைவிடும்ஆயர்கள் வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும்
ஈட்டியஇசைதிசை பரந்தன வயலுள் இரிந்தனசுரும்பினம், இலங்கையர்குலத்தை
வாட்டிய வரிசிலை வானவரேறே! மாமுனிவேள்வியைக்காத்து. அவபிரதம்
ஆட்டிய அடுதிறலயோத்தியெம்மரசே! அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே.

திருமங்கையாழ்வார் - பத்தாம் பத்து – 3ஆம் திருமொழி – 1ஆம் பாசுரம்

ஏத்துகின்றேம் நாத்தழும்ப இராமன் திருநாமம்
சோத்தநம்பீ! சுக்கீரிவா! உம்மைத்தொழுகின்றேம்
வார்த்தை பேசீர் எம்மை உங்கள்வானரம் கொல்லாமே
கூத்தர்போல ஆடுகின்றோம் குழமணிதுரமே.

திருவரங்கத்தமுதனார் - இராமாநுசநூற்றந்தாதி - 37ஆம் பாசுரம்

படிகொண்டகீர்த்தி இராமாயணமென்னும் பக்திவெள்ளம்
குடிகொண்டகோயிலிராமானுசன் குணங்கூறும். அன்பர்
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளங்கனியும் நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து. என்னையும் ஆளவர்க்காக்கினரே.

மங்கள ஸ்லோகம்
மங்களம் கோஸலேந்த்ராய மஹநீய குணாத்மநே ।
சக்ரவர்த்தி தநூஜாய ஸார்வ பௌமாய மங்களம் ॥

ஸ்ரீசீதா சமேத ஸ்ரீராமர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: